முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 17 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாணிக்கம் | வயது | : | 51 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 24.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது தர்மபுரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.09.2014 அன்று விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது நீதித்துறை நடுவர் எண்.1 , சிதம்பரம் அவர்களின் வேண்டுகோள் கடிதத்துடன் அண்ணாமலை நகர் காவல்நிலைய குற்ற எண். 125/2014 வழக்கு பொருள் ஒரு சீல் வைத்த காகித பார்சலில் முத்திரை சரிபார்க்கப்பட்டு ஆய்வகத்தில் பெறப்பட்டது. தலைமைக்காவலர் எண்.307 திரு.ரவி அவர்கள் மூலமாக கொண்டுவரப்பட்டது. அதை துணை இயக்குநரின் மேற்பார்வையில் பகுப்பாய்வு செய்ததில் அந்த காகித பார்சலின் மேல் ஒட்டப்பட்ட வாசகம் அண்ணாமலை நகர் காவல்நிலையம் குற்ற எண். 125/2014, CP.No.146/2014 இரத்தம் படிந்த

பஞ்சு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுள் இருந்த பஞ்சை ஆய்வு செய்ததில் அப்பஞ்சில் இரத்தம் இருப்பது கண்டறியப்பட்டது. மேற்கண்ட பஞ்சில் இருந்த இரத்த மாதிரியை இரத்த வகையை கண்டறிய இயக்குநர், தடய அறிவியல்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆய்வு போக எஞ்சியுள்ள வழக்கு சொத்தில் விழுப்புரம் உயிரியல் 304/2014 என்ற எண் கொடுக்கப்பட்டுள்ளது. 29.09.2014 என்ற தேதியிடப்பட்ட ஆய்வு அறிக்கை மற்றும் ஆய்வு போக எஞ்சியுள்ள வழக்கு சொத்துக்களை 08.10.2014 அன்று தலைமைக்காவலர் 2161 திரு.திருமேனி அண்ணாமலைநகர் காவல்நிலைய காவலர் மூலமாக நீதித்துறை நடுவர் எண்.1, சிதம்பரம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ஆய்வறிக்கை அசாஆ. 15 ஆகும். இதுகுறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

A1, A10 எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - மேற்படி இரத்தம் படிந்த பஞ்சு எந்த இடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படவில்லை. நீதிமன்ற கடிதத்தில் சம்பவ இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் விசாரணையில் கூறப்பட்ட அனைத்து விஷயங்களையும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக அரசுத்தரப்பு ஆதாயத்திற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

A12 எதிரிதரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

மறுவிசாரணை - இல்லை